Source: *Tamil Murasu*, p3
Date: 3 May 2019

# ஓரின உறவு குறித்து மாறிவரும் மக்களின் மனப்போக்கு

ஓரினக் காதலர்களின் உரிமைகள் குறித்த அம்சங்களின் தொடர்பில் சிங்கப்பூரர்களிடையே கணிசமான மனமாற்றம் ஏற்பட்டு உள்ளதாக கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

ஓரினப் பாலியல் உறவு, ஓரின திருமணம், ஓரினத் தம்பதிகள் பிள்ளையைத் தத்தெடுப்பது உள்ளிட்ட அம்சங்களை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பைவிட இப்போது மக்கள் அதிகம் ஏற்றுக் கொள்வதாக தெரிய வருகிறது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கும் இவ்வாண்டு ஜனவரிக்கும் இடையே நடத்தப்பட்ட இந்த ஆய்வில், ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடையே பாலியல் உறவு ஏற்படுவது முற்றிலும் தவறல்ல, அல்லது பெரும்பாலான நேரத்தில் தவறல்ல என்று 20 விழுக்காட்டினருக்கும் அதிகமானோர் கருத்து தெரிவித்தனர்.

2013ஆம் ஆண்டில் இந்த ஆய்வு நடத்தப்பட்டபோது 10 விழுக்காட்டினரே இத்தகைய கருத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

சமூக, அரசியல், நன்னெறி விவகாரங்களில் பொதுமக்கள் இடையே தற்போது எத்தகைய மனப்போக்கு நிலவுகிறது என்பதை அறிவது இந்த ஆய்வின் நோக்கம்.

4,000க்கும் அதிகமான சிங்கப்பூரர்கள், நிரந்தரவாசிகளிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

எடுத்துக்காட்டாக, 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டோரில் பத்தில் ஆறு பேர், ஓரினப் பாலியல் உறவைத் தவறாகவே கருதவில்லை அல்லது பெரும்பாலான நேரத்தில் தவறாகக் கருதவில்லை.

மாறாக, 65 வயதுக்கு மேற்பட்டோரில் கிட்டத்தட்ட 10 விழுக்காட்டினர் மட்டுமே அத்தகைய கண்ணோட்டத்தை வெளிப்படுத்தினர். வயதுவாரியாக மட்டுமின்றி கல்வித் தகுதி அதிகரிக்க அதிகரிக்க, முற்போக்கு சிந்தனையும் அதிகரிக்கிறது.

ஓரினக் காதலர்களின் உரிமைகள் குறித்த அம்சங்களைப் பொறுத்தவரை, மற்ற சமயத்தவரைக் காட்டிலும் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் அதிகப் பழமை வாய்ந்த மனப்போக்கைக் கொண்டிருப்பதாக இந்த ஆய்வில் தெரியவந்தது. இருப்பினும், பொதுவாக மூத்தோரைவிட இளையர்கள் முற்போக்கு சிந்தனை உடையவர்களாக இருக்கின்றனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.